1975 மார்ச் 31]

செய்து தரப்பட வேண்டும். இவைகளைச் செய்து தந்தால் மக்கள் ஓரளவு செல்லக் கூடும். எழில் நிறைந்த இடம் என்று தான் குறிப்பு கிடைத்து இருக்கிறது. நிதிப் பற்றுக்குறை காரணமாக இந்தப் பகுதியை நல்ல முறையில் மாற்ற வேண்டும் என்ற செயல்குறிப்பு கைவிடப்பட்டு இருக்கிறது. ஆனால் சாலை போடுவதில், ஓய்வு இல்லம் அமைப்பதில் நாம் கவனம் செலுத்திய பிறகு ஓரளவு மக்கள் அந்தப் பகுதிக்குப் போக வரமுன்வரக்கூடும். நிதி வளம் ஏற்பட்ட நிலையில் இது கவனிக்கப்படும்.

ராங்கியன் கண்மாய்.

*495 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையிலிருந்து புல்வாய்க்கரை செல்லும் சாலையில் மழைக் காலங்களில் ராங்கியன் கண்மாய் கரைப்பிரளி (சகதி) ரோட்டை மறைத்துக்கொள்வதால் அக்கண்மாயில் கரைகளுக்கு சிமெண்ட் revetment கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : மதுரை-மண்டபம் நெடுஞ்சாலையிலிருந்து புல்வாய்க்கரை செல்லும் சாலையில் மழைக்காலங்களில் ராங்கியன் கண்மாய் கரைப்பிரளி அதாவது சகதி ரோட்டை மறைத்துக் கொள்வதால் சில நேரங்களில் போக்குவரத்து கூட ஸ்தம்பித்து விடுகிறது. ஒரு தடுப்புச் சுவர் அல்லது கரைகளுக்கு சிமெண்ட் ரிவெட்மெண்ட் கட்ட வேண்டும். அதற்கு அரசு குறிப்பும் இருக்கிறது. இனியாவது அப்படி ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, உறுப்பினர் சொல்லுவது எல்லாம் உண்மைதான். உறுப்பினர் குறிப்பிட்ட கண்மாய்க்குக் கரை கட்ட 50 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு போடப்பட்டு இருப்பதாக ஆராய்ச்சியில் தெரிகிறது. நிதிநிலை இப்போது வளமாக இல்லையாதலால் இதைக் கவனிப்பதற்கு இல்லை. நிதிநிலை சரியான பிறகு கவனிக்கப்படும்.

உலகமடையில் பாலம்.

*496 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், தஞ்சாக்கூர் பில்வாய்க்கரை சாலையில் மாரைநாடு கண்மாய் உலகமடையில் பாலம் கட்டும் உத்தேசம் அரசிடம் உண்டா ?